# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 243/43 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාද — 1976.12.17

243/43 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண்: டபிள்யு. 68 (70)/76.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மேல், சனாதிபதி யவர்களினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**வி. கொபல்லவ,**
*சனாதிபதி.*

கொழும்பு,
1976 திசெம்பர் 17.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (விலங்கு அத்துமீறல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளும், அச்சட்டத்தின் 35 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவையும், 1962 ஆகஸ்டு 20 ஆம் தேதிய 13,268 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டவையுமான ஒழுங்குவிதிகளும் எப்படியிருப்பினும் இவ்வொழுங்குவிதிகள் பயனுடையனவாக இருத்தல் வேண்டும்.

**பாகம் I**

3. பயிரிடப்பட்ட ஏதேனும் சொந்தக் காணியுள் அத்துமீறி நுழையும் விலங்கெதனையும் கைப்பற்றுவதும், அத்தகைய விலங்கினை—

(அ) அத்துமீறலால் ஏற்படுத்தப்பட்டதும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் மதிப்பீடு செய்யப்பட்டதுமான சேதங்கள் எவையேனும் இருப்பின், அவற்றின் முழுத் தொகையும் ;

(ஆ) ஏதேனும் விலங்கு கைப்பற்றப்பட்டதன் பின்னர், தடுப்பில் வைத்திருக்கப்படும்போது அவ்விலங்கினைப் பராமரிப்பதற்கான செலவுகளெனத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் மதிப்பீடு செய்யப்பட்டதான நியாயமான செலவுகளும்

அவ்விலங்கின் சொந்தக்காரரால் அவருக்குச் செலுத்தப்படும் வரையில் அல்லது இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் தகுதிவாய்ந்த அதிகாரியினால் அறவிடப்பட்டு அவருக்குச் செலுத்தப்படும் வரையில், கட்டிவைப்பதும் அதனைத் தடுப்பில் வைப்பதுவும், பயிரிடப்பட்ட சொந்தக் காணி எதனதும் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சிக்காரருக்கு அல்லது அத்தகைய சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

4. 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் மதிப்பீடு செய்யப்படக்கூடிய அத்தகைய பணத் தொகையினைக் காணிச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்ட நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் செலுத்துமாறு விலங்குச் சொந்தக்காரருக்கு அவர் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய பணத்தொகையானது செலுத்தப்பட்டதன் மேல், விலங்கானது, அத்தகைய விலங்கின் சொந்தக்காரரிடம் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. விலங்குச் சொந்தக்காரர், 3 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டதான பணத் தொகையினை, 4 ஆம் ஒழுங்குவிதியில் அத்தகைய செலுத்துகைக்கெனக் குறிக்கப்பட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறுமிடத்து அல்லது விலங்குச் சொந்தக்காரர் யார் என அறிந்துகொள்ள முடியாதவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய விலங்கினைப் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்றல் வேண்டும் அல்லது விற்குமாறு செய்வித்தல் வேண்டும். அத்தகைய விற்பனையினால் பெறப்பட்ட பணமானது, பின்வரும் முன்னுரிமை நிரல் பிரகாரம் செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) 3 ஆம் ஒழுங்குவிதிகளுக்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்டதான அத்தகைய பணத் தொகையானது எக் காணியுள் விலங்கானது அத்துமீறிச் சென்றதோ அக்காணிச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு ;

(ஆ) மீதி எவையேனும் இருப்பின், விலங்குச் சொந்தக்காரருக்கு அல்லது அத்தகைய விலங்குச் சொந்தக்காரர் யார் என அறிந்துகொள்ள முடியாதவிடத்து, திரட்டு நிதியத்திற்கு.

## பாகம் II

6. இவ்வொழுங்குவிதிகளின் I ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், விலங்குகளின் சொந்தக்காரர்களை, அத்தகைய விலங்குகள் அத்தகைய காணிக்குள்ளாகக் கட்டாக்காலிகளாகத் திரிவதை அனுமதிக்க வேண்டாமென விலங்குகளின் சொந்தக்காரரை எச்சரிக்கும் விளம்பரம் ஒன்று அத்தகைய காணிக்குள் துலாம்பரமான இடத்தில் வெளிக்காட்டப்படுமானால், அத்தகைய காணிக்குள் அத்துமீறி செல்லும் விலங்கெதனையும் சுட்டுக் கொல்லுதல் அல்லது வேறு வகையில் அழித்தல், பயிரிடப்பட்ட சொந்தக் காணி எதனதும் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அல்லது அத்தகைய சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

7. ஆறும் ஒழுங்குவிதியின்கீழ் சுட்டுக் கொல்லப்பட்ட அல்லது வேறு வகையில் அழிக்கப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சொந்தக்காரர் அவ்விலங்கின் சடலத்தை அகற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், அதனை அகற்றுவதற்கு உரித்துடையவரான ஆள் எவரினாலும் சடலமானது கோரப்படாதவிடத்து, அச்சடலமானது தகுதிவாய்ந்த அதிகாரியினால் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கப்படுதல் வேண்டும். அத்தகைய விற்பனையில் பெறப்பட்ட பணமானது, 6 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட காணிச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்குச் செலுத்தற்பாலதான தொகை எனத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினைக் கழித்ததன் பின்னர், திரட்டு நிதியில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளில்—

"நிருவாக மாவட்டம்" என்பது (392 ஆம் அத்தியாயமான) நிருவாக மாவட்டங்கள் சட்டம் என்பதன் பொருளுக்குட்பட்ட நிருவாக மாவட்டம் எனப் பொருளாகும் ;

"விலங்கு" என்பது எருது அல்லது எருமை எனப் பொருளாவதுடன் செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, அல்லது கோழி முதலியனவற்றை உள்ளடக்கும் ; ஆனால் தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட விலங்கெதனையும் உள்ளடக்காது ;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் எனப் பொருளாகும் ;

"சொந்தக்காரர்" என்பது ஏதேனும் விலங்கு தொடர்பில், அத்தகைய விலங்குக்கு அப்போதைக்குப் பொறுப்பாயுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர்" என்பது ஏதேனும் தனிப்பட்ட காணியின் தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசினால் அல்லது அதன் சார்பில் அல்லது அத்தகைய சொந்தக்காரரினது அல்லது இருப்பாட்சியாளரினது பணிப்பு மூலம் அல்லது பணிப்பின்கீழ் செய்யப்படுகின்ற வேறு எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம், கொடைப்பத்திரம் அல்லது எப்பெயர்கொண்டோ, பதவிப்பெயர் கொண்டோ அழைக்கப்படும் வேறு ஏதேனும் சாதனம் மூலமாக அல்லது அதன் அதிகாரத்தின் கீழ் அக்காணியை உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது அதில் இருப்பாட்சி செய்கின்ற எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"கோழி முதலியன" என்பது வீட்டுக்கோழிகள், வான்கோழிகள், வாத்துகள் அல்லது தாராக்கள் என்று பொருளாகும் ; அத்துடன்

"தனிப்பட்ட காணி" என்பது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ், அரசினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம், கொடைப்பத்திரம், அல்லது எப்பெயர் கொண்டோ, பதவிப்பெயர் கொண்டோ அழைக்கப்படும் வேறு ஏதேனும் சாதன மூலம் அல்லது அவற்றினது அதிகாரத்தின்கீழ் எவரேனும் ஆளினது உடைமையில் அல்லது இருப்பாட்சியிலுள்ள ஏதேனும் அரச காணியையும் உள்ளடக்கும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது